# சீர்காழி நகராட்சி



2018–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20.08.2018 திங்கள் கிழமை காலை 11.00 மணிக்கு சீர்காழி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரனகூட்ட நடவடிக்கை.

முன்னிலை.திருமதி.மு.அஜிதாபர்வின்.B.sc
தனி அலுவலர் (ம) ஆணையர்
சீர்காழி நகராட்சி.

**பொரு எண்-1**

நாகப்பட்டினம் மாவட்டம் சீர்காழி நகராட்சியில் 2002 ஆம் வருடத்தில் பல்லுயிர் பன்மியச் சட்டம் (மத்தியசட்டம்) , 2004 ஆம் வருடத்திய பல்லுயிர் பன்மிய விதிகள் மற்றும் 2017ஆம் வருடத்திய தமிழ்நாடு பல்லுயிர் பன்மிய விதிகள் ஆகியவற்றில் தொகுத்தளிக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளுக்கு இணங்க, இந்நகராட்சியில் தனித்துவமிக்க தாவரங்கள் மற்றும் பல்லுயிர்கள் ஆகியவற்றின் பாதுகாப்பிற்காக பின் வரும் உறுப்பினர்களை கொண்ட பல்லுயிர் பன்மிய மேலாண்மைக்குழு தோற்றுவிக்கப்பட்டமைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | திரு.பி.சுப்ரமணியன்<br>தலைவர் ரோட்டரி கிளப் ஆப் சீர்காழி, சீர்காழி | குழுத்தலைவர் |
| 2 | திரு.ஜி.கிருஷ்ணமூர்த்தி<br>ரேஞ்சர் வனஅலுவலர், சீர்காழி | செயலாளர். |
| 3 | திருமதி.இ.கலையரசி<br>செம்மலர்சுயஉதவிக்குழு, நங்கநலத்தெரு, சீர்காழி | உறுப்பினர் |
| 4 | திருமதி.உ.தாட்சாயினி,<br>அன்னைசுயஉதவிக்குழு, சீர்காழி, | உறுப்பினர் |
| 5 | திருமதி.எஸ்.பாத்திமாபீவி<br>பிஸ்மில்லா சுயஉதவிக்குழு, காமராஜர் தெரு | உறுப்பினர் |
| 6 | திரு.எஸ்.சொர்ணபால் தலைவர் ரோட்டரி<br>கிளப் ஆப் டெம்பிள் டவுன் சீர்காழி, சீர்காழி | உறுப்பினர் |
| 7 | திரு.பி.வேல்முருகன்,விவசாயி<br>புளிச்சக்காடு, சீர்காழி | உறுப்பினர் |
| | சிறப்புஅழைப்பாளர்கள் | |
| 1 | திரு.ஆர்.சங்கர்,வட்டாட்சியர்,சீர்காழி தாலுக்கா. | |
| 2 | திருமதி.. Dr.K.தேவலதா,முதன்மைமருத்துவஅலுவலர்,<br>சீர்காழி அரசுமருத்துவமணை,சீர்காழி. | |

| | |
|---|---|
| 3 | திரு.Dr.முத்துகுமரசாமி,கால்நடைமருத்துவர்,<br>சீர்காழி கால்நடைமருத்துவமனை,சீர்காழி. |
| 4 | திரு.வெற்றிவேலன் , வேளாண்துறை அதிகாரி,<br>ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்கத்துறை, சீர்காழி |
| 5 | திரு.ஆர்.கார்த்திகேயன்,தலைமைஆசிரியர்,<br>நகராட்சி உயர்நிலைப் பள்ளி,சீர்காழி |
| 6 | திரு.எ.செல்வகுமார்,துணைகாவல்ஆய்வாளர்,<br>சீர்காழி நகரகாவல்நிலையம்,சீர்காழி |

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 1192/2018/எச்1)

பொரு எண்-2

சீர்காழி நகராட்சிக்கு சொந்தமான காந்தி பூங்கா மற்றும் நகராட்சி அலுவலகம் ஆகிய இடங்களில் ஜீலை - 2017 முதல் ஜீன் 2018 வரை ஆகிய 12 மாதங்களுக்கு மாலை முரசு தினசரி செய்திதாள் வழங்கப்பட்டதற்க்கு உரிய ஏஜென்டிடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.3,650/—ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து தொகை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :
மன்றம் அனுமதிக்கலாம்.

பொரு எண்-3

சீர்காழி நகராட்சி – பொது சுகாதாரப்பிரிவில் ஈசானிய தெருவில் உள்ள கலவை உரத்திடலில் குவியல்களாக காணப்படும் குப்பைகளை வாரி எடுத்து ஒரு சேர குவித்து தொடர்ந்து குப்பைகளை கொட்டுவதற்கு ஏதுவாக இயந்திரங்கள் மற்றும் வாகனங்கள் வாடகை அடிப்படையில் அமர்த்தி கலவை உரத்திடலில் பணிகள் மேற்கொள்ள 11.05.2018 ல் ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வந்துள்ளதை பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி தொகை | |
|---|---|---|---|
| | | JCB ஆள்கூலி டீசல் உட்பட ஒருமணி நேரத்திற்கு | டிராக்டர் நபர் ஆள் கூலி டீசல் உட்பட ஒரு நாள் வாடகை |
| 1 | திரு.ஆர்.தன்ராஜ்<br>கீழ தென்பாதி<br>சீர்காழி | ரூ.800 | ரூ.2700 |
| 2 | திரு.ஆர்.கலைவாணன்<br>பிடாரி கீழவீதி<br>சீர்காழி | ரூ.900 | ரூ.2800 |

அலுவலக குறிப்பு : 1. மேற்கண்ட இரண்டு ஒப்பந்தபுள்ளியில் வரிசை எண்.1 ல் குறிப்பிட்டுள்ள திரு.ஆர்.தன்ராஜ் கீழதென்பாதி என்பவர் கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்த புள்ளியை ஏற்கலாம்.

2. அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி பெற்று பணிஆணை வழங்கி பணிகள் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.518/2018/ எச்.1

பொரு எண்-5

G.O (MS) No.73 Dated-19.07.2018 Copy

பொரு எண்-5

பொது சுகாதாரப்பிரிவு – வாகனம் TN51AZ-6752 டம்பர் பிளேசர் லாரிக்கு தகுதி சான்று பெரும் பொருட்டு வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்ய ஆகும். உத்தேச செலவீனம் ரூ.31000/– க்கு நகர்மன்ற தீர்மான எண்.778 நாள்.15.03.2018 அனுமதித்து அவ்வாகனத்தில் பழுது நீக்க பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தபுள்ளி கோரியதில் 27.07.2018 அன்று கீழ்கண்ட ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளள.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தபுள்ளி தொகை |
|---|---|---|
| 1 | திரு.கே.செல்வம்<br>12 Q,ஊழியக்காரன் தோப்பு சீர்காழி. | ரூ.32700/– |
| 2 | திரு.எஸ்.பாலசந்திரன்<br>27, பிடாரி கீழ வீதி சீர்காழி. | ரூ.29900/– |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண்.2 ல் குறிப்பிடப்பட்டுள்ள திரு.எஸ்.பாலசந்திரன், பிடாரி கீழவீதி, சீர்காழி. என்ற நிறுவனம் கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண்.1911/2018/எச்.1

பொரு எண்-6

இந்நகராட்சியின் பொது நிதி திட்டம் -2018-2019 ன்கீழ் சீர்காழி நகராட்சியில் குப்பைகளை இட்டு உரம் தயாரிக்க வார்டு எண்–2 சுபஸ்ரீ கார்டன், வார்டு எண்-14 காந்தி பூங்கா மற்றும் வார்டு எண்-21 திரிபுரசுந்தரி நகர் பூங்கா ஆகிய இடங்களில் (Onsite Compost) அமைக்கும் பணிக்கு ரூ.6,00,000/- மதிப்பீட்டில் பணி செய்திட 06.06.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த மதிப்பீட்டு தொகை | ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்த மதிப்பீட்டைவிட |
|---|---|---|---|---|
| 1 | கே.செல்வம், ஓப்பந்ததாரர் சீர்காழி | ரூ.5,10,045.00 | ரூ.5,21,352.00 | (+) 2.22 % (அதிகம் ) |
| 2 | எஸ்.பாலச்சந்திரன்,ஒப்பந்தத ாரர், சீர்காழி | | ரூ.5,08,422.00 | (-) 0.32 % ( குறைவு ) |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் எஸ்.பாலச்சந்திரன், ஒப்பந்ததாரர் சீர்காழி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஒப்பந்த மதிப்பீட்டைவிட (-) 0.32 % (குறைவு) உள்ளதால் இதனை ஏற்று பணி உத்திரவு வழங்கிட மன்றத்தின் முன் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்-1054/2018/இ1

பொரு எண்-7

சீர்காழி நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளில் 2018 – 2019 ஆம் ஆண்டுக்கான இந்நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய சொத்து வரி , தொழில் வரி, குடிநீர் கட்டணம் மற்றும் வரியில்லா இனங்களுக்கான கேட்பு அறிவிக்கைகள் கணினி மூலம் அச்சடித்து வரிவிதிப்பாளர்களுக்கு வழங்கிட உள்ளூர் மற்றும் அருகில் உள்ள அச்சக நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் கோரி அறிவிப்பு வழங்கப்பட்டத்தில்.

| | | |
|---|---|---|
| 1 | நாதன் அச்சகம்<br>மயிலாடுதுறை | 1) A4 Size C.D Printout charge per page - Rs.2/–<br>2) A4 Size C.D Printout charge per book - Rs.50/–<br>3) F/S Size C.D Printout charge per page - Rs.2.50/–.<br>4) F/S Size C.D Printout charge per book -Rs.60/– |
| 2 | ஜெயின் அச்சகம்<br>மயிலாடுதுறை | 1) A4 Size C.D Printout charge per page - Rs.2.75/–<br>2) A4 Size C.D Printout charge per book - Rs.65/–<br>3) F/S Size C.D Printout charge per page - Rs.3.00/–.<br>4) F/S Size C.D Printout charge per book -Rs.75/– |

| | | |
|---|---|---|
| 3 | கலைஞர் அச்சகம் மயிலாடுதுறை | 1) A4 Size C.D Printout charge per page - Rs.2.5/–<br>2) A4 Size C.D Printout charge per book - Rs.3.00/–<br>3) F/S Size C.D Printout charge per page - Rs.60/–.<br>4) F/S Size C.D Printout charge per book - Rs.70/–. |

ஆகிய நிறுவன்ங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. இதில் குறைந்த விலைப்புள்ளிகள் வழங்கிய நாதன் அச்சகம் மயிலாடுதுறை நிறுவனத்திற்கு கணினி மூலம் அச்சடித்து கேட்பு அறிவிக்கைகள் இந்நகராட்சிக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதியுடன் உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.2489/2018/எச்.1

| | |
|---|---|
| பொரு எண்-8 | பொது சுகாதாரம் – சீர்காழி நகராட்சி – தற்போது வடகிழக்கு பருவமழை தொடங்க உள்ளதால் ஆரம்பிக்கும் முன்பாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கால்வாய்கள் மற்றும் அதனை ஒட்டியுள்ள பாலத்தில் மண்நிரம்பி தண்ணீர் வெளியேற இயலாமல் சுகாதார பிரச்சினை ஏற்பட இருக்கின்ற நிலையில் ஆய்வு செய்யப்பட்டதில் 23 இடங்களில் / பகுதிகளில் உள்ள கால்வாய்கள் உட்புறம், முன்புறம், பின்புறம் தேங்கியுள்ள மண்ணை மண்தள்ளும் இயந்திரம் (JCB) கொண்டு அகற்ற வேண்டியுள்ளது.<br>மேலும் மழைக்காலங்களில் மழைநீர் செல்லும் கால்வாய் அதனை ஒட்டியுள்ள பாலங்களில் தண்ணீர் வெளியேற இயலாமல் இருக்கின்ற நிலையில் Aircompressure Lorry கொண்டு அகற்ற வேண்டியள்ளது.<br>மேற்கண்ட பணிகள் அனைத்தையும் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் ஒரு மண் தள்ளும் இயந்திரம் (JCB) மற்றும் Aircompressure Lorry கொண்டு பணிகள் செய்திட ஒப்பந்தபுள்ளி கோரவும், பொதுநிதியில் இருந்து செலவீனம் மேற்கொள்ளவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.75,000/– க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு. அ) மன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண்.2213/2018/எச்.1 |
| பொரு எண்-9 | சீர்காழி நகராட்சியில் உள்ள அனைத்து பகுதிகளிலும் எடுக்கப்படும் குப்பைகளை ஈசானியத் தெருவில் அமைந்துள்ள குப்பை கிடங்கிற்கு கொண்டுவர போதிய வாகன வசதிகள் இல்லாத காரணத்தினாலும், மேலும் சீர்காழி நகராட்சி பகுதிகளுக்கு பேட்டரியால் இயங்கும் வாகனம் (BOV) 14 எண்ணிக்கையும் மற்றும் இலகுரக வாகனம் (LCV) 6 எண்ணிக்கையும் தேவை படுகிறது. அதில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5 மற்றும் நகராட்சி மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் அறிவுரையின் படி இந்நகர்மன்ற தீர்மான எண்-222 நாள்-18.06.2018 ல் 2 எண்ணிக்கை பேட்டரியால் இயங்கும் வாகனம் மற்றும் 2 எண்ணிக்கை இலகுரக வாகனம் (LCV) வாங்குவதற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு நகர்மன்ற தீர்மான எண்-242 நாள்-20.08.2018 ன் படி அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகோரி பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ள நிலையில் மீதமுள்ள பேட்டரியால் இயங்கும் வாகனம் (BOV) 12 எண்ணிக்கையும் மற்றும் இலகுரக வாகனம் (LCV) 4 எண்ணிக்கையும் விநியோகம் செய்திட நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5 மற்றும் நகராட்சி மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் அறிவுரையின் படி ரூ.44.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதியில் பணி மேற்கொள்ள இதற்கான அனுமதி நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் அனுமதி பெற வேண்டியும் மற்றும் மேற்படி பணிக்கான நிதியினை திடக்கழிவு மேலாண்மை திட்டம்-2018-19 ன் கீழ் முழு மானியமாக வழங்க கோரியும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு_1. மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண்.1190/2018/இ1) |
| பொருள் எண்-10 | தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2018-19 -ம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான மானியக் கோரிக்கை எண். 34,அறிவிப்பு எண்.14-ல் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிகக் குறைந்த விலையில் வழங்க தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic vending centre) நிறுவப்படும் எனஅறிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் ஆகியோரின் அறிவுரையின் படியும் சீர்காழி நகராட்சியில் உள்ள 24 வார்டுகளில் தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் பொது கிணறு மற்றும் ஆழ்துளைக் கிணற்று நீரை ஆதாரமாக கொண்டு தீவிர வடிகட்டுதல் மற்றும் எதிர் சவ்வூடு பரவல் முறையில் சுத்திகரிக்கப்பட்டு பொது மக்களுக்கு வழங்கும் வண்ணம் சுத்திகரிக்கும் இயந்திரம் நிறுவ நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் ஆகியோரால் புதிய பேருந்து நிலைய வளாகத்தில் ஒரு எண்ணிக்கை அமைப்பதற்கு பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று 23.08.2018 ல் ஒப்பந்த புள்ளி கோரப்பட்டு 22.09.2018 ல் அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டமைக்கும் தற்சமயம் 6 வார்டுகளில் புதிதாக தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic Vending Centres)அமைத்திடவும் ஆக கூடுதல் 7 எண்ணிக்கை |

| | |
|---|---|
| | நிறுவிட ஏற்படும் செலவினத் தொகை ஒன்றுக்கு உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.18.00 இலட்சம் (ரூபாய் பதினெட்டு இலட்சம்) வீதம் மொத்தம், 7 வார்டுகளில் ரூ. 126.00 இலட்சம் (ரூபாய். நூற்று இருபத்தி ஆறு இலட்சம்) ஆகும்.<br>இத்திட்டத்தை நிறைவேற்ற மூலதன செலவினத்தை தனியார் தொழில் நிறுவனம் / தொழில் முனைவோர்கள் CSR மற்றும் இதர தொகையில் இருந்து ஈடு செய்து கொள்ளவும், இயக்குதல் பராமரித்தல் செலவினத்தை பயனாளிகளிடம் இருந்து பெறப்படும் கட்டணத்தில் இருந்து ஈடு செய்து கொள்ளவும், மின் கட்டணத்தை தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் செலுத்தவும், நகராட்சி மூலம் இடம் மற்றும் நீர் ஆதாரம் மட்டும் வழங்க திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.<br>எனவே, நகரில் உள்ள 7 வார்டுகளில் தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic Vending Centres) தனியார் தொழில் நிறுவனங்கள் / தொழில் முனைவோர்கள் CSR மற்றும் இதர தொகையிலிருந்து ஈடு செய்து கொள்ளவும், மேலும், அனுபவம் வாய்ந்த மற்றும் உரிய தொழில் நுட்பநுணுக்கங்களை கொண்ட தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்ய ஏதுவாக, அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளில் "Expression of Interest" விளம்பரம் செய்து தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்யவும் அனைத்து கீழ்க்கண்ட வார்டுகளிலும் செயல்படுத்தவும், இதற்கான அனுமதி நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் அனுமதி பெறவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |

| வ.எண் | வார்டு எண் | சுத்திகரிப்புநிலையம் அமைக்கதேர்ந்தெடுக்கப்பட்டஇடம் |
|---|---|---|
| 1 | 2 | சுபஸ்ரீ கார்டன் |
| 2 | 6 | ரயில்வே தோப்பு தெரு |
| 3 | 16 | கீழதென்பாதி |
| 4 | 20 | என்.எஸ்.பி நகர் |
| 5 | 22 | துறையூர் |
| 6 | 23 | கோவில்பத்து |
| 7 | 18 | புதிய பேருந்து நிலைய வளாகம் |

**<u>அலுவலககுறிப்பு</u>**

1. மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.2807 /2018/இ1)

| | |
|---|---|
| பொரு எண்-11 | சீர்காழி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்- 22 பனமங்களத்தில் உள்ள நகராட்சி தொடக்கப்பள்ளியில் பராமரிப்பு பணி மேற்கொள்ள அப்பள்ளியின் தலைமை ஆசிரியர் மற்றும் பொது மக்களின் வேண்டுகோளுக்கினங்க நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்கள் நேரடி ஆய்வு செய்ததை தொடர்ந்து மேற்படி பள்ளி கட்டிடம் மிகவும் பழுதடைந்து உள்ளது கண்டரியப்பட்டது ஆணையர் அவர்களின் அறிவுரை படி மாணவ, மாணவிகளின் கல்வி நலன் கருதி மேற்படி பள்ளியினை பராமரிப்பு பணி செய்வது மிகவும் அவசியமாகிறது. எனவே அதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்தினை இந்நகராட்சி கல்வி நிதியில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். |
| பொரு எண்-12 | சீர்காழி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்- 24 பனங்காட்டான்குடி ரோட்டில் உள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளியில் பராமரிப்பு பணி மேற்கொள்ள அப்பள்ளியின் தலைமை ஆசிரியர் மற்றும் பொது மக்களின் வேண்டுகோளுக்கினங்க நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்கள் நேரடி ஆய்வு செய்ததை தொடர்ந்து மேற்படி பள்ளி கட்டிடம் மிகவும் பழுதடைந்து உள்ளது கண்டரியப்பட்டது ஆணையர் அவர்களின் அறிவுரை படி மாணவ, மாணவிகளின் கல்வி நலன் கருதி மேற்படி பள்ளியினை பராமரிப்பு பணி செய்வது மிகவும் அவசியமாகிறது. எனவே அதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்தினை |

| | |
|---|---|
| | இந்நகராட்சி கல்வி நிதியில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். |
| பொரு எண்-13 | சீர்காழி நகராட்சி – பொது சுகாதாரப்பிரிவில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளை மேற்கொள்வதற்கு மிக குறைந்த அளவு மட்டுமே நிரந்தர துப்புரவு பணியாளர்களை உள்ளதால் அப்பணியாளர்களை கொண்டு டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள இயலாத நிலை உள்ளதால் DBC பணியாளர்களை வருடந்தோறும் பணியில் அமர்த்தி தொடர்ந்து பணி செய்திட நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை –5 அவர்களின் கடித ந.க.எண்.2571/2017/து1 நாள்.23.04.2018 ன் படி பணிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்ணயித்துள்ள தினக்கூலி விகிதத்தில் ( Market Rate ) நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.270/– என்ற விகிதத்தில் 10 DBC பணியாளர்களை தற்காலிக தினக்கூலி அடிப்படையில் 01.06.2018 முதல் 30.09.2018 மாதம் வரை 3 மாதங்களுக்கு பணிக்கு அமர்த்தி டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.250000/ க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2.பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று செலவீனம் மேற்கொள்ள பணிகள் மேற்கொள்வதற்கு செயல்முறை ஆணை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.1177/2018/ எச்.1 |

(ஓம்) . திரு.மு.அஜிதாபர்வின்.B.sc.,
தனி அலுவலர் மற்றும் ஆணையர்,
சீர்காழி நகராட்சி.

இடம்–சீர்காழி
நாள்–20.08.2018

/உண்மை நகல்/

ஆணையர்
சீர்காழி நகராட்சி.